# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

பாடம் : தமிழ் அரைப்பாடத் திட்டம் - I கால அளவு : 3 மணி நேரம்

வகுப்பு : 12th மதிப்பெண்கள் : 90

## பகுதி- I

**பலவுள் தெரிக :** 14×1=14

1."மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!' -இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

2.இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

3.பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

4.தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

5.பொருத்துக
அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4) மேய்ச்சலை மறந்தன
அ) 1,3,4,2 ஆ) 3,4,2,1 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4

6. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

7.சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை _____
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

8."உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

9.எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ.தனிக்குடும்ப முறை ஆ. விரிந்த குடும்ப முறை
இ. தாய்வழிச் சமூகமுறை ஈ. தந்தைவழிச் சமூகமுறை

10.வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

11."காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

12. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

13.சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

14 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

**Subscribe:** https://www.youtube.com/@Marutham_acadamy

**பகுதி - II. பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட,தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16.' நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைர மாகிறது' – விளக்கம் தருக.

17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

18. ஞாலத்தின் பெரியது எது?

19. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

21. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

22. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் இரு தொடர்களாக்குக.

23. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

24. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க. (1 மட்டும்)

அ) கிணற்றுத் தவளை போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க (1 மட்டும்)

அ) தலை, தளை, தழை ஆ) விலை, விளை, விழை

26. கலைச்சொல் தருக.

அ) Level Crossing ஆ) Passport

27. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

ஆ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

28. சொல்லை சேர்த்தும் பிரித்தும் எழுதுக.

அ) தாமரை ஆ) வெங்காயம்

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

30. இலக்கணக் குறிப்பு எழுதுக.

அ) வியர்வை வெள்ளம் ஆ) உயர்ந்தோர்

31. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக (1 மட்டும்)

அ) கலங்கி ஆ) பொலிந்தான்

32. புணர்ச்சி விதி எழுதுக (1 மட்டும் )

அ) எத்திசை ஆ) அருங்கானம்

# மருதம் அகாடமி Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

**Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy**

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

33. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பபான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

34. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

35. குகனோடு ஐவராகி விடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

36. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×4=8**

37. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

38. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

39. பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்கம் தருக

40. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

41. அ) நிரல்நிரை அணியை சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) பொருள் வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.

YouTube Channel 9659838789

42. அ) இலக்கிய நயம் பாராட்டுக.

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது:
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரர்!

\- பாரதியார்

43 .பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புப் படுத்தி எழுதுக. (1 மட்டும்).

அ) தன் கையே தனக்கு உதவி ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

44. தமிழாக்கம் தருக.

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

45. கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந் திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முன்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு.

- இளங்கோ கிருஷ்ணன்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

46.அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன்,பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

47.அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

48.அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்......கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க

## பகுதி - V

**அடிப்பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

49. "குகனோடும் ஐவர் எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல் பாடலை எழுதி பாவகையைக் குறிப்பிடுக.

50. "சுடும்",என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com